கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு.E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.

2026–ம் ஆண்டு மார்ச் 24ம் நாள், செவ்வாய்க்கிழமை
அசல் வழக்கு எண்.206/2010
CNR No.TNMD130000842010
-----

1) பழனிச்சாமி என்ற ராஜா (இறப்பு)
2) செல்வி
3) செந்தில்
4) கார்த்திகா ... வாதிகள்

/ எதிர்/

வேல்விழி ... பிரதிவாதி

இவ்வழக்கானது கடந்த 14.03.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.G.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.B.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்குரை எதிர்வழக்குரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

வழக்குச் சொத்தை நோக்கி பிரதிவாதி ஒரு வாசலைத் திறக்க முயல்வதன் மூலம் வாதிகளின் அமைதியான உடைமை மற்றும்

அனுபவத்தில் தலையிடுவதைத் தடுக்கும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இவ்வழக்கின் செலவு தொகை கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. <u>வழக்குரை சுருக்கம் :–</u>**

1.1) விளாச்சேரி உட்கடை, நாகமலை புதுக்கோட்டை கிராமம், புஞ்சை சர்வே எண்.115/3ல் கட்டுப்பட்ட 1 ஏக்கர் 22 செண்டு நிலமும், மற்ற சொத்துக்களும் ஆதியில் சுப்பையா சேர்வை, பழனிச்சாமி சேர்வை, மைனர் மாயாண்டி சேர்வை ஆகியோருக்கு பாத்தியம் என்றும், அதன்படி A செட்யூல் சொத்துக்கள் 1ம் வாதியின் பாட்டனார் சுப்பையா சேர்வை பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றும், அதில் சர்வே எண்.115/3ல் மேல்புறமுள்ள 41 செண்டு சுப்பையா சேர்வை பாகத்திற்கும், மையமுள்ள 40 செண்டு பழனிச்சாமி சேர்வை பாகத்திற்கும், கீழ்புரமுள்ள 41 செண்டு அவரது பேரன் மைனர் மாயாண்டி சேர்வை பாகத்திற்கும் ஒதுக்கப்பட்டது என்றும், சுப்பையா சேர்வைக்கு வாதியின் தகப்பனார் மட்டுமே வாரிசு என்றும்,

1.2) சுப்பையா சேர்வை காலமான பிறகு அவருக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.115/3ல் 41 செண்டு நிலத்தை அவரது ஒரே வாரிசான வாதியின் தகப்பனார் அடைந்து அனுபவித்து வந்த நிலையில், சர்வே எண்.115/3ல் கட்டுப்பட்ட மேல்புறம் உள்ள 41 செண்டு இடத்தை பல வீட்டடி மனைகளாக பிரித்து பல்வேறு நபர்களுக்கு கிரையம் செய்து கொடுத்து விட்டார் என்றும், விற்ற இடங்கள் போக பாக்கி இடமான தாவா

சொத்தை வாதியின் தகப்பனார் தன் கைவசம் வைத்து அனுபவித்து வருகிறார் என்றும்,

1.3) பிரதிவாதி தாவா சொத்திற்கு தெற்கேயும், கிழக்கையும் சொத்துக்களை கிரையம் வாங்கியிருக்கிறார் என்றும், பிரதிவாதியின் முன் பாத்தியஸ்தர்களின் கிரைய பத்திரங்களில் கவனக்குறைவாக வடக்கே பொதுப்பாதை என தவறாக தாவா சொத்தை குறிப்பிட்டுள்ளதை ஆஸ்பதமாக கொண்டு பிரதிவாதி, வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் இடையூறு செய்கிறார் என்றும், தாவா சொத்திற்கு வாதியின் தகப்பனார் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதி கிரையப்பத்திரத்தில் தவறான நான்குமால் சொல்லி இருப்பதை ஆஸ்பதமாக கொண்டு வாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை நோக்கி நுழைவாயில் வைத்து கட்டடம் கட்ட முயற்சி செய்தார் என்றும், பிரதிவாதிக்கு அவ்வாறு கட்டிடம் கட்டுவதற்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றும்,

1.4) குறிப்பாக, 01.04.2010ம் தேதி தாவா சொத்தை நோக்கி தலைவாசல் வைக்க போவதாக பிரஸ்தாபம் செய்தார் என்றும், அதனை வாதியின் தகப்பனார் அக்கம் பக்கத்தில் இருத்ந நண்பர்கள், உறவினர்கள் உதவியுடன் தடுத்து விட்டார் என்றும், இடத்தை விட்டு செல்லும் போது பிரதிவாதி தொடர்ந்து இடையூறு செய்வேன் என்று மிரட்டி விட்டு சென்றார் என்றும், அதனால் வாதியின் தகப்பனார் வேறு வழியின்றி தாவா வழக்கை தாக்கல் செய்ததாக வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2. எதிர்வழக்குரை சுருக்கம்:

2.1) வழக்கிடை சொத்தின் மொத்த சொத்தான 1 ஏக்கர் 22 செண்ட் இடமானது சர்வே எண்.115/3ல் கட்டுப்பட்டது என்றும், மேற்படி மொத்த சொத்தில் மேல்புறம் 41 செண்ட் இடமானது காலம் சென்ற முதல் வாதியான பழனிச்சாமி என்ற ராஜா அவர்களின் தகப்பனராகிய சுப்பையா சேர்வை அவர்களுக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பெற்று அவர் காலத்திற்கு பின்பு அவருடைய மனைவி செல்லம்மாள் அவர்களுக்கும் மற்றும் காலம் சென்ற முதல் வாதிக்கும் வாரிசு உரிமைப்படி கிடைக்கப் பெற்ற சொத்து என்றும்,

2.2) வழக்கிடை பாதையான 21 அடி அகல பொது பாதை மொத்த சொத்தான 41 செண்ட் வீட்டடி மனைகளாக பிரிக்கப்பட்ட காலம் முதல் பிரதிவாதியின் முந்தைய சுவான்தாரர்களும், பிரதிவாதியும் எந்தவித இடைஞ்சலும் இன்றி தங்கு தடையின்றி நாளது தேதி வரை பாதையாக உபயோகப்படுத்தி வருகிறார்கள் என்றும், 21 அடி அகலப் பொதுப்பாதையில் வாதிகளுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றும், வழக்கிடை சொத்தின் மொத்த சொத்தான 41 செண்ட் நிலங்கள் அனைத்தினையும் பாதைகள் அமைத்து வீட்டடி மனைகளாக பிரித்து சுமார் 40 வருடங்களுக்கு முன்பே அனைத்து சொத்தினையும் கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றும்,

2.3) ஆகையால், எந்த உரிமையும் இன்றி வாதிகள் சொத்தில் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளது சட்டத்திற்கு முரணானது

என்றும், மேற்படி பொது பாதை கடந்த 1966ம் வருடம் முதல் நடைமுறையில் இருந்து வருகிறது என்றும், வாதிகள் அதை அபகரிக்கும் எண்ணத்தோடு சுமார் 44 வருடங்கள் கழித்து வழக்கிடைச் சொத்தில் எந்த உரிமையுயின்றி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், வழக்கிடைச் சொத்தான 21 அடி இடமானது பொது பாதை என்றும், அதில் வாதிகள் கோரியுள்ளவாறு எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும், எனவே வாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும் எனக்கோரி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>எழுவினாக்கள்</u>** :

இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை மற்றும் இந்த வழக்கு சம்மந்தமான அனைத்து ஆவணங்களையும் இந்நீதிமன்றம் கவனமாக நன்கு பரிசீலனை செய்து கீழ்கண்ட எழுவினாக்கள் இந்த நீதிமன்றத்தினால் வனையப்பட்டுள்ளன.

1. வழக்குச் சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டதா? அல்லது பிரதிவாதி கூறுவது போன்று பொதுப்பாதையா?

2. விளம்புகை பரிகாரம் கோராததால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதா?

3. வழக்கு சொத்தில் வாதிகள் தனித்த சுவாதீனத்தில் இருக்கிறார்களா?

4. வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?

5. தரப்பினர்களுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

4. **சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :

4.1) வாதிகள் தரப்பில், வா.சா.1, வா.சா.2 சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு, வா.சா.1 மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 மற்றும் நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்களும், வா.சா.2 மூலமாக வா.சா.ஆ.9 முதல் வா.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4.2) பிரதிவாதி தரப்பில், பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4.3) பிரதிவாதி தரப்பில் கீழ்கண்ட மாண்புமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் முன்தீர்ப்புகள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

1) S.Dayalan @ Selvam and others

Vs

D.Narmatha

S.A No.122 of 2013

Dated: 30.06.2023

2) R. Thirugnanasambandamoorthy

Vs

1. N.Durai 2. M.Govindaraj 3. R.Ramadoss

2025(5) CTC 815

Dated: 24.07.2025

3) Siva Subramania Nadar (died) 2. S.S.Baskar and others

Vs

Arulmigu Pathira Kaliamman Koil Rep. by its Haqdar S.Veldurai

2025 (4) TNLT 362

Dated: 20.11.2025

**<u>எழுவினாக்களுக்கான தீர்வு</u>** :

**5. <u>எழுவினாக்கள் 1, 2 –க்கான தீர்வு</u>** :

1. வழக்குச் சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டதா? அல்லது பிரதிவாதி கூறுவது போன்று பொதுப்பாதையா?

2. விளம்புகை பரிகாரம் கோராததால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதா?

5.1) வழக்கு சொத்தானது வாதிகளுக்கு ஆதியில் பாத்தியப்பட்டது என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில், வழக்கு சொத்தின் ஒருபகுதியை 1, 3, 4 வாதிகள் பிரதிவாதியின் தாயாருக்கு பி.வா.சா.ஆ.4 கிரைய ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளனர் என்றும், அந்த கிரைய ஆவணத்தில் வாதிகள் குறிப்பிடும் வழக்கு

சொத்தானது பொதுப்பாதை என்று குறிப்பிட்டு பி.வா.சா.ஆ.4 கிரைய ஆவணம் எழுதி கொடுத்ததாகவும், அதற்கு பின்னிட்டு பிரதிவாதியின் தாயார் பி.வா.சா.ஆ.4 கிரைய சொத்தை பி.வா.சா.ஆ.5 தானசெட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்றும், இந்நிலையில் வாதிகள் அவர்கள் எழுதி கொடுத்த கிரைய ஆவணத்திற்கு முரணாக வழக்கு சொத்தானது பொதுப்பாதை அல்ல என்றும் வாதிகளுக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றும் தவறாக கூறி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பிரதிவாதி தரப்பு வழக்கு ஆகும்.

5.2) அதற்கு மாறாக, வாதிகள் தரப்பு வழக்கானது வழக்கு சொத்து 5 செண்ட் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும், மேற்படி வழக்கு சொத்தை தவிர்த்த பிற பகுதியைத்தான் பிரதிவாதியின் தாயாருக்கு பி.வா.சா.ஆ.4 கிரைய ஆவணம் மூலம் கொடுக்கப்பட்டது என்றும், மேற்படி பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் தவறுதலாக வழக்கு சொத்து பொதுப்பாதை என்று குறிப்பிட்டுள்ளதை பிரதிவாதி தனக்கு சாதகமாக கொண்டு வழக்கு சொத்து பொதுப்பாதை என்று பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறார்கள் என்பது வாதிகள் தரப்பு வழக்கு ஆகும்.

5.3) வாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்தபோது, ***" வாதிகள் கவனக்குறைவாக தவறாக எழுதிகொடுத்த நான்குமாலை அடிப்படையாக கொண்டு வாதிகளுக்கு பாத்தியப்பட்ட வழக்கு சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 01.04.2010ல் வாதிகள்***

***அனுபவத்தில் இடையூறு செய்ததால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது"*** என்று குறுக்கு விசாரணை செய்துள்ளனர். அதன்படி பி.வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தில் வழக்கு சொத்து பொதுப்பாதை என்று குறிப்பிட்டு பி.வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தை 1, 3, 4 வாதிகள் பிரதிவாதியின் தாயாருக்கு எழுதி கொடுத்தது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

5.4) இந்நிலையில், மேற்படி பி.வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தில் வழக்கு சொத்து பொதுப்பாதை என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்ற வாதத்தை வாதிகளே இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101ன் கீழ் நிரூபணம் செய்ய வேண்டியது சட்டப்படியானது ஆகும். வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், ***" தகப்பனார் கொடுத்த கிரைய பத்திரத்தையோ, ரத்தினசாமி எழுதிகொடுத்த கிரைய பத்திரத்தையோ அதில் உள்ள நான்குமால் தவறு என்று கூறி மேற்படி பத்திரங்களை ரத்து செய்ய பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். நானும் எனது தகப்பனார் மற்றும் சகோதரி கார்த்திகா மூவரும் சேர்ந்து சர்வே எண்.115/3ல் 405 ச.அடி இடத்தில் பிரதிவாதிக்கு 21.09.2007ம் தேதி கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 21.09.2007ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் நகல்தான் என்றால் சரிதான். ஏற்கனவே நடைபாதைக்கு போடப்பட்டிருக்கும் 21 அடி அகல பொதுபாதைக்கும் தெற்கு என சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான்குமால் தவறாக போடப்பட்டுள்ளது.***

5.5)***மேற்படி பத்திரத்தை குறித்து வழக்கில் எங்கேயும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பத்திரத்தில் போடப்பட்ட***

***நான்குமால் தவறு என்று இந்த வழக்கிலோ அல்லது தனி வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் 1966ம் வருடம் பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பத்திரத்தில் நான் நடைபாதை போடப்பட்டிருக்கும் 21 அடி வீதிக்கும் தெற்கே என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது"*** என்று சாட்சியமளித்துள்ளார்.

5.6) இந்நிலையில், மேற்படி பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் வழக்கு சொத்தானது பொதுப்பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளதை பொறுத்து அது தவறாக உள்ளது என்று நிரூபணம் செய்யும்விதமாக வாதிகள் தரப்பில் இதுவரை எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்க வில்லை என்று தெரியவருகிறது. மேலும் வழக்கு சொத்தானது பொதுப்பாதை என்று பிரதிவாதி தரப்பில் எதிர்வாதம் செய்து பி.வா.சா.ஆ.4 ஆவணம் தாக்கல் செய்த நிலையில், மேற்படி பி.வா.சா.ஆ.4 ஆவணம் சட்டப்படியான ஆவணமாக உள்ள நிலையிலும், வழக்கு சொத்தை பொறுத்து வாதிகளின் உரிமை மூலமானது சட்டப்படியாக பிரதிவாதியால் மறுக்கப்பட்ட நிலையில் வாதிகள் வழக்கு சொத்தை பொறுத்து வழக்கு சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்ற விளம்புகை பரிகாரம் கோர வேண்டியது சட்டப்படியானது ஆகும்.

5.7) எனினும், மேற்படியான விளம்புகை பரிகாரம் எதுவும் வாதிகள் தரப்பில் கேட்கப்படவில்லை. இந்நிலையில், வழக்கு சொத்து பொதுப்பாதை என்று வாதிகள் தரப்பில் தவறாக பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் எழுதி கொடுக்கப்பட்டதாக கூறும் வாதிகள் தரப்பு வாதத்தை நிரூபணம் செய்யும்விதமாக வாதிகள் தரப்பில் சட்டப்படியான சாட்சி, சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தவில்லை. இந்நிலையில், பி.வா.சா.ஆ.4 ஆவணத்திற்கு முரணாக வழக்கு சொத்து பொதுப்பாதை அல்ல என்றும், வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றும் வாதிகள் கூறும் வாதமானது சட்டப்படியானதாக இல்லை.

5.8) இந்நிலையில், வழக்கு சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் வாதிகள் கோராததால் அசல் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றும், வழக்கு சொத்து வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டதாக வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்றும், வழக்கு சொத்தானது பொதுப்பாதையாக உள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து எழுவினாக்கள் 1,2, க்கு வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**6. <u>எழுவினா 3 –க்கான தீர்வு</u>** :

3. வழக்கு சொத்தில் வாதிகள் தனித்த சுவாதீனத்தில் இருக்கிறார்களா?

வழக்கு சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் வாதிகள் கோராததால் அசல் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றும், வழக்கு சொத்து

வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டதாக வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்றும், தாவா சொத்து பொதுப்பாதை அல்ல என்று நிரூபணம் செய்யும்விதமாக வாதிகள் தரப்பில் எவ்வித சட்டப்படியான சாட்சி, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தாத நிலையிலும், தாவா சொத்து காலி இடமாக உள்ள நிலையிலும், வழக்கு சொத்தில் வாதிகள் தனித்த சுவாதீனத்தில் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து எழுவினா–3ற்கு வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**7. <u>எழுவினா 4 –க்கான தீர்வு</u>** :

4. வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?

வழக்கு சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் வாதிகள் கோராததால் அசல் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றும், வழக்கு சொத்து வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டதாக வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்றும், வழக்கு சொத்தில் வாதிகள் தனித்த சுவாதீனத்தில் இல்லை என்றும் இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில், வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து எழுவினா–4ற்கு வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

8. **<u>எழுவினா 5 –க்கான தீர்வு</u>** :

5. தரப்பினர்களுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

இவ்வழக்கில் வழக்கு சொத்தை பொறுத்து வாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையிலும், எழுவினாக்கள் 1 முதல் 4 வரையிலானவைகளுக்கு வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ள நிலையிலும், இவ்வழக்கு சந்தர்ப்ப சூழ்நிலைகளின்படி வாதிகளுக்கு வேறு பரிகாரங்கள் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் எழுவினா –5ற்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக,** இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 24.03.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.24 15:02:02 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

**இணைப்பு** :

**1. வாதி தரப்பு சாட்சிகள்** :

வா.சா.1. செந்தில்
வா.சா.2. முத்து

**2. வாதி தரப்பு சான்றாவணங்கள் :**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1. | மாதிரி வரைபடம் |
| வா.சா.ஆ.2. | 17.03.2010ம் தேதியிட்ட கிஸ்தி ரசீது. |
| வா.சா.ஆ.3. | அசல் வழக்கு எண்.18/1925ன் வழக்கின் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.4. | தீர்ப்புரையின் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.5. | அசல் வழக்கு எண்.375/1937ன் வழக்கின் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.6. | தீர்ப்புரையின் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.7. | 19.02.1994ம் தேதியிட்ட கிஸ்தி ரசீது. |
| வா.சா.ஆ.8. | 07.03.1998ம் தேதியிட்ட கிஸ்தி ரசீது. |
| வா.சா.ஆ.9. | 08.04.2010ம் தேதியிட்ட ஆணையரின் அறிக்கை சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.10. | 15.02.2018ம் தேதியிட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.11. | 15.02.2018ம் தேதியிட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல். |

**3. பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :**

பி.வா.சா.1. சக்கரவர்த்தி

**4. பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :**

| | |
|---|---|
| பி.வா.சா.ஆ.1. | 05.07.1966ம் தேதியிட்ட கிரைய பத்திரம் சான்றிட்ட நகல். |

பி.வா.சா.ஆ.2. 06.02.2006ம் தேதியிட்ட பொது அதிகார ஆவணம் சான்றிட்ட நகல்.

பி.வா.சா.ஆ.3. 21.09.2007ம் தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல்.

பி.வா.சா.ஆ.4. 21.09.2007ம் தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல்.

பி.வா.சா.ஆ.5. 17.11.2008ம் தேதியிட்ட தான செட்டில்மெண்டு பத்திரம் சான்றிட்ட நகல்.

**5. <u>நீதிமன்ற சாட்சிகள்</u> :** இல்லை.

**6. <u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> :**

நீ.ம.சா.ஆ.1 நீதிமன்ற ஆணையரின் அறிக்கை.

நீ.ம.சா.ஆ.2 நீதிமன்ற ஆணையரின் வரைபடம்.

நீ.ம.சா.ஆ.3 குறுவட்ட அளவரின் வரைபடம்.

**7. <u>சாட்சிய சான்றாவணங்கள்</u> :** இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.24 15:02:14 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

அசல் வழக்கு எண்.206/2010
செவ்வை – தீர்ப்புரை
நாள்:24.03.2026